<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

**R.E.A.No.02/2024**

in

**REP.No.36/2013**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | S.R.வெங்கடாசலம் | ம.சா. : | 1 |
| த/பெயர் : | ராமசாமி கவுண்டர் | தொழில் : | விவசாயம் |
| ஊர் : | சௌதாபுரம் கிராமம் | தாலுக்கா : | குமாரபாளையம் |
| வயது : | 59 | நாள் : | 09.07.2025 |

<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

1. நான் மேற்படி மனுவை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனக்கு விற்பனை செய்தவருக்கு இருந்த கடன் சம்பந்தமாக எனது சொத்தை தவறாக ஜப்தி செய்துவிட்டார்கள், அதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால், நான் 1998ல் கிரையம் வாங்கினேன். நான் மட்டும் கிரையம் வாங்கினேனா என்றால், மேற்படி சொத்தை மூன்று பேர் சேர்ந்து வாங்கினோம். அவர்கள் நான், M. வெங்கடாசலம், M. தங்கராசு ஆகியோர் சேர்ந்து வாங்கினோம். அதில் எனக்கு 1/2 பாகமும், மற்ற இருவருக்கும் சேர்த்து 1/2 பாகமும் ஆகும். எனக்கு யார் சொத்தை விற்றது என்றால், 2ம் எதிர்மனுதாரர் ராஜவேல் என்பவர் விற்றார்.

2. நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்திலேயே ராஜவேலுக்கு ஆவண எண்.1387/1989 ன்படி பாத்தியப்பட்ட சொத்தை எனக்கு விற்பனை செய்வதாக கண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த மூலபத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. மூலபத்திரத்தில் என்ன செக்குபந்தி உள்ளது, 2ம் எதிர்மனுதாரர் ராஜவேல் என்ன சொத்தை வாங்கியுள்ளார் என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்து கொள்ளவில்லை. நான் விலைக்கு வாங்கும்பொழுது 2ம் எதிர்மனுதாரர் ராஜவேல் அவருக்கு பாத்தியப்பட்ட முழுசொத்தையும் எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்தாரா அல்லது ஒருபகுதி சொத்துக்களை வைத்துக்கொண்டாரா என்றால், எங்களுக்கு விற்பனை செய்தது போக மீதமுள்ள சொத்துக்களை வைத்துள்ளார்.

3. மனு சொத்திற்கு எந்த பகுதியில் 2ம் எதிர்மனுதாரர் ராஜவேல் சொத்து உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது. ராஜவேலுக்கு சொந்தமான தெற்கு பக்கம் உள்ள சொத்து காலியாக இருக்கிறதா என்றால், முன்பு பட்டறை இருந்தது, தற்போது காலியாக உள்ளது. அந்த சொத்து சுமாராக எவ்வளவு விஸ்தீரணம் இருக்கும் என்றால், நான்கைந்து செண்ட் இருக்கும். அந்த சொத்து இன்றளவும் 2ம் எதிர்மனுதாரர் ராஜவேல் வசம் தான் உள்ளது என்றால், இல்லை, அதில் பகுதி சொத்தை நான் கிரையம் செய்து கொண்டேன், மற்றொரு பகுதி சொத்தை சோமசுந்தரம் என்பவர் கிரையம் பெற்றுள்ளார். நான் கிரையம் வாங்கி சுமார் 5, 6 வருடங்கள் இருக்கும். சோமசுந்தரம் எப்பொழுது வாங்கினார் என்றால், நானும், அவரும் ஒரே நாளில் தனித்தனியாக கிரையம் செய்து கொண்டோம். அந்த இடத்தின் அசல் பத்திரம் என் வசம் உள்ளது என்றால், உள்ளது. நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் என்னவென்றால், 184/4C ஆக இருக்கலாம்.

**(1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**Sd/ D. Mohankumar,**
**Additional Subordinate Judge,**
**Trruchengode.**